செ.வெ.எண் : 702

# அரசு செய்தி வெளியீடு – 10.10.2009

## காவிரி டெல்டா மாவட்டங்களின் கடைமடைப் பகுதிகளுக்கு போதுமான தண்ணீர்! முதலமைச்சர் கலைஞர் ஆணை!

மேட்டூரிலிருந்து காவிரி டெல்டா மாவட்டங்களில் சாகுபடிக்காக இந்த ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்பட்டது. முதலில் 5 ஆயிரம் கனஅடி என்ற அளவில் தொடங்கி, விவசாயப் பெருமக்களின் தேவைக்கேற்றவாறு படிப்படியாக அதிகரித்து, தற்போது 22 ஆயிரம் கனஅடி தண்ணீர் வழங்கப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை குறைவாகப் பெய்த காரணத்தால், மேட்டூரின் முழுக் கொள்ளளவான 120 அடியை இன்றுவரை எட்டவில்லை. அதிகபட்சமாக 101 அடியை மட்டுமே எட்டி, தற்போது 91 அடி அளவே உள்ளது. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இன்னும் தொடங்கவில்லை என்பதாலும், காவிரி டெல்டா விவசாயப் பெருமக்களின் தேவையைக் கருத்தில்கொண்டும், மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவை இன்றிலிருந்து 23 ஆயிரம் கனஅடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த அளவிற்கு அதிகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டாலும், டெல்டா மாவட்டங்களில் போதிய மழையின்மை காரணமாக, கடைமடைப் பகுதிகளுக்கு தேவையான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற விவசாயிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் முறையீட்டை ஏற்று, காவிரி மற்றும் வெண்ணாற்றில் தற்போது வழங்கப்படும் தண்ணீரின் அளவை முறையே 5 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் கனஅடியாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் கலைஞர் இன்று ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9